உ

ஓம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சமிவனமென்னும் கோயிலூர் பரம்பரை
திருவண்ணாமலை ஈசானிய மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ, மகாதேவ ஞானதேசிகரவர்களின்
மாணவருள்ளொருவராகிய
செங்கந் தாலுக்கா மேலைப்புஞ்சை யென்னும்
மேலைமாநகர் மடாலயத்தில் பிர்ம்மநிஷ்டாபரராய்
எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ இராமாநந்த மெய்ஞ்ஞானதேசிகர்

# இரட்டைமணிமாலையும், பதிகமும்.

இவை
ஷெ சுவாமிகளின் பாதசேகரரிலொருவராகிய
மூலக்காடு-சண்டமாருதகோத்திரம்
போளூர் தாலுக்கா இரண்டேரிப்பட்டு நகர்
கணிதசோதிடம் மகாதேவ நாயனார் குமாரர்

சின்னக்கண்ணெனும் அருணாசல நாயனார்
அவர்களால் இயற்றப்பெற்று

மேலைப்பாலூர் சோதிடம் - மா. பழநி நாயனார்
அவர்கள் பொருளுதவியால்

வேலூர் இலட்சுமி விலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1937

KOVILOOR ANDAVAR
A. No. 36132
LIBRARY, KOVILOOR

உ

ஓம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சமிவனமென்னும் கோயிலூர் பரம்பரை

திருவண்ணாமலை ஈசானிய மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ, மகாதேவ ஞானதேசிகரவர்களின்

மாணவருளொருவராகிய

செங்கந் தாலுக்கா மேலைப்புஞ்சை யென்னும்

மேலைமாநகர் மடாலயத்தில் பிர்ம்மநிஷ்டாபரராய்

எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ இராமாநந்த மெய்ஞ்ஞானதேசிகர்

# இரட்டைமணிமாலையும்,

# பதிகமும்.

இவை

ஷை சுவாமிகளின் பாதசேகரரிலொருவராகிய

மூலக்காடு-சண்டமாருத கோத்திரம்

போளூர் தாலுக்கா இரண்டேரிப்பட்டு நகர்

கணிதசோதிடம் மகாதேவ நாயனார் குமாரர்

சின்னக்கண்ணெனும் அருணாசல நாயனார்

அவர்களால் இயற்றப்பெற்று

மேலைப்பாலூர் சோதிடம் - மா பழநி நாயனார்

அவர்கள் பொருளுதவியால்

வேலூர் இலட்சுமி விலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1937

## முகவுரை.

நமது பாரதகண்டத்தின்கண் தொண்டநன்னாட்டினில் அறிவானந்தவடிவமாய் விளங்காநின்ற சீவன்முத்தர் எண்ணிறந்தோர் அவர்களில் ஒருவராகியும் திருவருணைக்கு மேற்றிசையில் விண்ணவனூ ரென்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்து அறிவானந்த வடிவமாய் துறவுபூண்டு அடுத்த மேலைபுஞ்சைமாநகரத்தில் அடியார்களால் இயற்றிய மடாலயத்தில் குருமூர்த்தமாய் எழுந்தருளி இருப்பவருமாகிய ஸ்ரீலஸ்ரீ இராமாநந்த மெய்ஞ்ஞானதேசிக சுவாமிகள் அவர்களால் இயற்றிய சொரூப விளக்க வினாவிடை கீர்த்தனைகள் கும்மிகளும் இத்துடன் ஷை குருநாதன்மீது அடியேனால் இயற்றிய இரட்டை மணிமாலை பதிகம் சரித்திரவசனமும் அறிந்தவளவில் வெளியிடலானேன்.

இங்ஙனம் அடியார்க்கடியன்,

அருணாசலம்.

உ
சிவமயம்.

# சாத்துகவி

ஸ்ரீ கோயிலூராதீனம் திருவண்ணமலை ஈசானிய மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ, நடேச ஞான தேசிக சுவாமிகள் இயற்றியது நேரிசை வெண்பா.

மஞ்சுதோ யண்ணு மலைக்குமேற் கேமேலைப்
புஞ்சையிரா மாநந்தன் பொன்னடிக்குக்—கொஞ்சி
யிரட்டைமணி மாலைபுனைந் தேத்தினை யைந்து
சரட்டை யருணு சலன். 1.

போளூர் ஸ்ரீ விடோபா சுவாமிகள் மடத்து பட்டத்தாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ, துரைசாமி ஞானதேசிக சுவாமிகள் இயற்றியது
எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகிரு ளகற்றும் தினகர னென்ன வுளத்திரு
ளனைத்தையு மகற்றும்
நலனுறு மேலைப் புஞ்சைமா நகரி னணுமிரா
மாநந்த னடிக்கு
மலமற விரட்டை மணிமாலை யாற்றி மன
மகிழ்ந்தா னையமகன்றே
சலமற கணித நூலுரை வன்மை சாரரு
ணுசல னன்றே. 2.

சென்னை ஆனந்தாசிரமசாதுமஹாசங்கத்து சங்கமூர்த்தி
யாகிய ஸ்ரீலஸ்ரீ நியாயசந்திர வேதாந்த பாஸ்கர
மஹாமண்டலேஸ்வர வீரசேகர சுப்பையஞானதேசி
கேந்திரசுவாமிகளின் மாணவருளொருவராகிய
ஸ்ரீ கணேசானந்த சுவாமிகள் இயற்றியது

எழுசீர்க்கழி நெடிலடிலாசிரிய விருத்தம்.

திருவணு மலைமேற் குறுமேலைப் புஞ்சை
சேரிரா மானந்த னடிக்கே
கருவகற் றிரட்டை மணிமாலை தன்னைக்
கழன்றனன் வள்ளுவர்மரபில்
வருமருநூற்கள் பலவுணரறிவன்
வன்மையோன் சோதிடந்தனிலே
யரிதெனவருளை மிகவுமா
தரிக்கும வனருணசலனன்றே. 3.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சிவசண்முக
மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் பாதசேகரரி
லொருவராகிய திருநதிக்குன்றம் ஸ்ரீ சண்முக
சரணாலய சுவாமிகள் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருவளரு மேலைபுஞ்சை நகரின் ஞானச்
செம்மலிரா மாநந்தத் தேசி கன்றாள்
பரிந்திரட்டை மணிமாலை பதிகந் தன்னால்
பண்புபெற வேயணிந்து பதம்பெற்றானல்
குருகுலவும் சோலையிரண் டேரிப் பட்டோர்
குலவுபுகழ் வள்ளுவராங் குலத்து தித்தோன்

அரியமறை சோதிடத்து வல்லோன் செல்வ
அருணாச லப்புனித நாவ லோனே. 4.

சென்னை ஆனந்தாசிரம சாதுமஹாசங்கத்து சங்கமூர்த்தி
யாகிய ஸ்ரீலஸ்ரீ நியாயசந்திர வேதாந்தபாஸ்கர
மஹாமண்டலேஸ்வர வீரசேகர சுப்பையஞான
தேசிகேந்திரசுவாமிகளின் மாணவர்களிலொருவராகிய
வில்வாரணி ஸ்ரீலஸ்ரீ கெங்காதர சுவாமிகளென்னும்
பரமாநந்தசுவாமிகள் இயற்றியது

நேரிசை வெண்பா.

அண்ணா மலைமேற் கமைமேலைப் புஞ்சையூர்
நண்ணிரா மாநந்த நற்றவற்கு விண்ணார்
மதியே யிரட்டை மணிமாலைச் செய்தான்
சதுரா ரருணா சலன். 5.

வித்துவான் போளூர் திருவாளர் ஆ தா. அரங்கசாமி
நாயகர் அவர்கள் இயற்றியது.

வெண்பா.

மேலைநகர்த் தேசிகன் மேன் மேவ விரட்டைமணி
மாலை பதிக மகிழ்ந்தணிந்தான்—சீலமுறு
வள்ளுவர் தம்மரபோன் சோதிடத்தான் மன்னுபுகழ்
கொள்ளுமரு ணாசலனுங் கோ. 6.

வித்வான் வல்லம்
திருவாளர் வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றியது

வெண்பா.

மேலைப்புஞ் சைக்கண் விளங்குமிரா மாநந்த
சீலமிகு தேசிகற்குச் செந்தமிழின்—வாலமுத

மான விரட்டைமணி மாலையுட ஞேர்பதி கந்
தானணிந்து தந்தான் றக.
அன்னவன்யா ரென்னி னணியவிரண் டேரிப்பட்
டென்னு நகரி னினிதுடையான்—முன்னை
மருணசஞ் செய்யு மதியின் வலத்தான்
அருண சலனென்பா ஞய்ந்து. 7.

போளூர் போர்டு உயர்தரக்கல்விச்சாலைத் தலைமைத்
தமிழாசிரியர் வித்வான் திருவாளர் வ. சோவிந்தராசலு
நாயகர் அவர்கள் இயற்றியது.
நேரிசை வெண்பா.

மாசிலாத் தேசிகனுய் மன்னுமிரா மாநந்த
வாசிரியன் பொன்னடிக் காக்கினுன்—காசினியிற்
றக்கவி ரட்டைமணி மாலை தமிழ்ப்பதிக
மொக்கஅரு ணசல மோர்ந்து. 8.

போளூர் போர்டு உயர்தரக்கல்விச்சாலை தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் மா. அ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
இயற்றியது.
நேரிசை ஆசிரியப்பா.

திங்களுங் கங்கையுந் தங்கிய முக்கட்
சங்கரன் மலையெனத் தனியுருக் கொளுந்திரு
வண்ணு மலையின் மேற்பா லணிசேர்
எண்ணு வளன்மே லைநகர் நண்ணு
மடாலய மொன்று மாண்புற வமைத்திடை
விடா அ திட்டைகொள் விட்ட வவாவினன்

இராமாநந்த னெனுஞ்சற் குருவைப்
பராவிப் பகர்ந்தனன் பங்கய வடிக்கே.
இரட்டை மணிமாலையும் பதிகமும்
இரட்டுநீ ரிரண்டே ரிப்பட் டூரினன்
வள்ளுவர் குலத்தில் வந்துநல் லொழுக்கா
லெள்ளறச் சிறந்தன னினியநற் பண்பினன்
மாதிடத் தானடி மறவாச் சிந்தையன்
சோதிடத் தாற்புக ழெய்துசொல் வன்மையன்
சின்ன கண்ணெனத் தெளியும்
பன்னரும் அருணாசலப்பெய ரோனே. 9.

வித்துவான் போளூர் ஆ. தா. அரங்கசாமி நாயகர்
மாணவர்களிலொருவராகிய இரண்டேரிப்பட்டு
நகர் திருவாளர் இராய னைனர் அவர்கள் இயற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா.

முத்தி பதத்தைச் சித்த நினைக்க
அத்தின மருளு மருணா சலத்தின்
மாடுறு மேலை நகர்தனின் மேவும்
பீடுறு ராமா நந்தநற் குருவின்
பாத மலரின் பன்னய மிலங்க
மாசி லிரட்டை மணிமாலையையும்
கோதில் பதிகமும் குவலயம் புகழச்
சாற்றினன் சோதிட சாத்திரந் தன்னில்
மிக்கபுகழும் மேன்மையும் பெற்றோன்
குமரனடியே குறியாய் நிற்போன்
ஏசிலி ரண்டே ரிப்பட் டதனில்
வாழு மருணா சலனென் போனே. 10.

ஈசூர் ஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகள் பரம்பரை சோழவரம்
வித்துவான் மல்லிகார்ச்சுன பிள்ளை மாணவர்களி
லொருவராகிய மாம்பட்டு நகர் திருவாளர்
இரத்தினாச்சாரியவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

மேலை நகர்மேவு மேன்மைமலி தேசிகன்மேன்
மாலை பதிக மருணீங்க—ஞாலமதில்
செய்தணிந்தான் சீலமுடன் சாக்கையர் தம்மரபோன்
ஐய்யவரு ணாசலக்கோன் தேர்ந்து. 11.

மாம்பட்டு நகர் திருவாளர் இரத்தினாச்சாரியார்
மாணவர்களிலொருவராகிய திருவாளர் போ. பு. அப்பா
குட்டி செட்டியார் இயற்றியது

நேரிசை ஆசிரியப்பா.

பூமக ளுறை தரு பொலிவுறுந் தொண்ட
வாமநூற் புலவர் மேவுறு நாட்டிடை
எண்ணருஞ் சிவத்தல மெண்ணான் கதனினும்
புண்ணிய தீர்த்தம் பலமே யுற்றதாய்
தரியநிலைக்கண் ணோக்கின தூய்ருஉம்
உரிமையா யேத்திடு மொப்பிலா வருணா
சலமதின் மேற்பாற் றிரும்லி மாடமும்
நலமதில் மிக்கவர் நல்லறம் புரிதலும்
பூமலர் சோலையிற் பொற்குயில் கூவலும்
தேமலர் கூந்தலார் செப்பொணா கற்பினிற்
பொலிந்திடு மேலைப் புஞ்சமா நகர்க்கண்
நலனெலா மொருங்கே நண்ணமே வினனால்

மாதங்கத்தனை வாழ்த்துங் கோயிலூர்
பேத மகற்றும் பரம்பரை வந்தவன்
புலன்வழி மனதை புகவிடா புனிதன்
கலைபயில் வினோதன் கருணைக் கடலான்
எட்டி ரண்டெனு மெழுத்தறி மேதையான்
நிஷ்டை சாதித்த நின்மல மூர்த்தியான்
இருளினை யோட்டுமிரவி போல்வனும்
கருதரு மிராமா நந்தநற் குரவன்
அந்தனற் றேசிகன் அம்புய மலர்த்தாள்
பந்தம தறவே பரிவுடன் சூட்டினன்
இருளரு மிரட்டைமணி மாலையொடு
அருள்மலி கவிஞரன்பு கொள்பதிகம்
கந்தவே ளிணையடி கருத்தினி லமைய
சந்ததமேற்றி டுஞ்சற்குண சீலனும்
மனையுளா னென்னினு மாசறு தூயன்
கணித சோதிடம் கணிக்க வல்லவன்
திரண்டநூற் பொருள்களைத் தெளிவாயோர்ந்த
இரண்டே ரிப்பட் டெனுநக ருறைதருஞ்
சாக்கையர் மரபினிற் றேக்கிய ஞான
பாக்கிய வானென பிறந்தநல்
வாக்க ருணாசல வள்ளல் தானே.

நேரிசை வெண்பா.

நன்மைமலி மேலைநகர் ஞானகுர வன்றனடி
புன்மையற வேயணிந்தான் பன்னரிய சொன்னயங்கள்
மன்னுந் திருவிரட்டை மாலையோடு சீர்பதிகம்
என்னுமிரு நூலதனையீண்டு.

சீலமுறு சாக்கையர் செம்மரபோன் சித்தமதில்
சாலதிரு சண்முகன்றன் செவ்வியதாள்—மாலறவே
யேத்திடுந் தூயனரு ணாசலப் பேரண்ணல்
சாத்திரஞ் சீர்த்தியுட னய்ந்து. 12.

ம-ா-ா-ஸ்ரீ, கஸ்தம்பாடி நகர் பாரதபிரசங்கம்
திருவாளர் நடேச முதலியார் அவர்கள் இயற்றியது.
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

புண்ணிய ருறையு மேலைப் புஞ்சைமா நகரின் மேவும்
அண்ணலா மிராமா நந்த வருள்மலி குரவன்தாளில்
எண்ணரு மிரட்டை மாலை யியலுறு பதிகந் தன்னை
கண்ணிய முடன்பு னைந்தான் கருதரு ணசலக்கோ. 13.

குன்றத்தூர் ஸ்ரீலஸ்ரீ சண்முகசரணாலய சுவாமிகள்
மாணவர்களிலொருவராகிய ஷெயூர் திருவாளர்
மூ. அ. வேணுகோபால் நாயகர் அவர்கள் இயற்றியது.
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீராரு மேலைநகர்த் தேசிகரா மாநந்தன் றிருத்தாண்மீது
தாராரு மிரட்டைமணி மாலையொடு நற்பதிகஞ் சாற்றி
[னைல்
பாராரு மிரண்டேரிப் பட்டீர னல்லடியார் பக்திமிக்
[கோன்
சீராருஞ் சோதிடத்து வல்லவரு ணாசலனு நாவலோனே

உ
சிவமயம்.
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

பொன்னகரா மேலைப் புரியிரா மாநந்த
னென்னுமுயர் தேசிகனை யேத்தவே - யென்னுளத்துக்
கந்தனுக்கு முன்பிறந்த கத்தனு மைந்துகரத்
தந்திமுகன் வந்தருளுந் தான்.

## அவையடக்கம்.

திருவளரு மேலைநகர்த் திகழுமிரா மாநந்தத் தேசி கன்
றுள்
கருவகற்ற விரட்டைமணி மாலையினுற் றுதிப்பதற்குக்
கருதும் பேதை
உரையதனி னற்புலவர் குற்றமொன்று மாராய்ந்தே
யுரையா ரென்னை
குருபரனைப் பரிந்துரைத்தான் குதலைமொழி குழவி
யெனக் கொள்வர் தாமே.

## நூல்.

### வெண்பா.

திருவோங்கு மேலைநகர்ச் சேர்ந்திலகுஞ் ஞானக்
குருபரரா மாநந்தக் கோவே—யருளெனக்கு
வேண்டுமென வேதுதித்தேன் வேதாந்தக் கோதிலருள்
பூண்டவனே காத்தருளிப் போது. (1)

கட்டளைக்கலித்துறை.

இப்போதோ பின்னையோ வென்றைக்கோ மாயு மிழி
யெப்போது நம்பிப் புவிமீ தரிவைய ரின்பசுக [யுடலை
முப்போது முண்டு முடியாப் பிறவியின் மூழ்குமெனைத்
தப்பா தினிக்காத் தருளிரா மாநந்த சற்குருவே. (2)

வெண்பா.

வேதாந்தந் தன்னை வினவுமடி யார்தமக்கு
நாதாந்த மெய்ப்பொருளை நண்ணுவித்துத்—தீதறவே
மேலைப் பதிவாழும் மெய்க்குருராமாநந்தன்
காலைப் பணிமனமே காண். (3)

கட்டளைக்கலித்துறை.

காணும் பொழுதினுங் காணு விடத்துங் கனவதுதான்
தோணும் பொழுதினு நாயேன் குருமொழி சொற்றிடலே
வேணுமிதற்கிணை யின்றெறன வேத்துவேன் மேலைநகர்ப்
பேணி யுறையிரா மாநந்த யீதுநற் பேறெனக்கே. (4)

வெண்பா.

பேரு மிகுபுகழும் பெற்றிலகு மேலைநகர்த்
தீரவிரா மாநந்த தேசிகன்ரு—ளார்வமொடு
கண்டு பணிபவர்க்கு காமாந்த காரமெலாந்
திண்டாடு நெஞ்சேநீ தேர். (5)

கட்டளைக்கலித்துறை.

தேரு தவர்கடந் தீய மனத்தே செறியுமலக்
கூருன வற்றை யொழித்து மறைகளுங் கூறரிய [செய்
பேருரு மெய்ஞ்ஞான வானந்த சிற்சோதி பெற்றிடச்
நீருரு மேனி நிமலரா மாநந்தப் பேர்முனியே. (6)

வெண்பா.

பெரும்பிறவி யெல்லாம் பெயர்ந்தகலு மாறு
கருமமன மாயை களைந்து நிரந்தரமாய்
நிற்கு நிலையருளு நேசமுடன் மேலைநகர்ச்
சற்குருவின் றுளடையத் தான். (7)

கட்டளைக்கலித்துறை.

தானுகி நிற்குந் தனிமையை யோராது தாமுடலை
நானுக வெண்ணிப் பிணியா லுழன்றெழி னங்கையர்பா
றேனடி வீழ்ந்திடு மீயெனச் சேர்ந்து திகைக்குமெனைக்
கோனுகி யாண்டருள் மேலை நகர்வாழ் குருபரனே. (8)

வெண்பா.

குருபரவென் றேதுதித்தேன் கோதகற்றி நாளும்
வருபிறவி வாய்க்கா வகைசெய்—தொருமொழியைத்
தந்தென்னை யாளத் தனியிரா மாநந்த
வந்தனையைக் கொள்க மனம். (9)

கட்டளைக்கலித்துறை.

மனத்தா னினைக்க வகையறி யேன்றுற வானவர்த
மினத்தாரைச் சார்ந்திட வெண்ணிலேன் பொல்லாத
வின்னலைச்செய்
தனத்தாரை நாடிப் பழியே சுமந்தவன் றுனெனினு
மனத்தான் முனியா தருளிரா மாநந்த மாகுருவே. (10)

வெண்பா.

மாமாயை யிற்சிக்கி மண்மே லலைந்தென்று
மேமாறு மென்னை யெடுத்தாளக்—கோமானுய்

வாகான மேலைநகர் வாழ்குருவே யெப்பொழுதுஞ்
சாகா நிலையெனக்குச் சாற்று. (11)

கட்டளைக்கலித்துறை.

சாக்கர முன்னைகச் சாற்று மவத்தைச் சழக்ககன்று
தேக்கிடு மாநந்தத் தெள்ளமு தூறுஞ் செழுநிலமா
மீக்கூ ரதீதத்தின் மேவி யினிதுற மிக்கபெரும்
பாக்கியந் தந்திடு மேயிரா மாநந்தன் பாதமதே. (12)

வெண்பா.

பாதம் பணிவார்தம் பாழ்பிறவி போக்கிடுமுன்
போதத் திருவடியைப் போற்றுது—மேதினியி
லுய்வனோ மேலைநக ரோங்கிரா மாநந்தத்
துய்யனே யென்னுளத்தே தோற்று. (13)

கட்டளைக்கலித்துறை.

தோற்றி யழியும் பிறவியிற் சிக்கித் துயரடைந்து
கூற்றுவன் கைக்கு ளகப்படு வேனைநின் கூரருளா
லேற்ற பொருடா னிதுவெனக் காட்டியீ டேற்றுவையே
மாற்றிலா மேலை நகரிரா மாநந்த மாதவனே. (14)

வெண்பா.

மாதவனே மேலைநகர் வாழுமிரா மாநந்தப்
போதனே நாயேன்றன் புந்தியினிற்—பாதமதைப்
பற்றி நினைக்கும் பரிசருள வேண்டுமென
உற்றடைந்தே னுண்மையதை யோர். (15)

கட்டளைக்கலித்துறை.

அதுவேநீ யானு மெனுமகா வாக்கிய மம்மொழியா
முதியவே தாந்த முடிவெனக் கோதி முறைப்படியே
பதியுமெய்ஞ் ஞான முளத்திடைத் தோன்றியே பாசமெலாந்
ததியகன் றோடச் செயுமிரா மாநந்த சற்குருவே. (16)

வெண்பா.

சச்சிதா நந்தபர மேசநீ தண்ணருளான்
மெச்சுமொரு மானிடனுய் மேவினையா—விச்சகத்து
வந்தலையு நாயினேன் வான்சோதி யாய்மருவ
எந்தவகை சொற்றிடுவா யின்று. (17)

கட்டளைக்கலித்துறை.

இன்றுன் றிருவடி யேத்திப் புனைய விலக்கணனு
லொன்று மறியே னுணர்ந்தாரை நாடே னுனதருளை
யென்று பெறுவே னெனவுறு மேக்கம் பெரிதுடையேன்
நன்றருண் மேலைப் புரியிரா மாநந்த நற்குருவே. (18)

வெண்பா.

வேதப் பொருளை விளங்கவுரை கோயிலூர்
மாதவன் றன்னருளான் மாண்புறவே—யோதியசீர்
மாதேவ பிரம்மவித்தை மாநிலத்தோ ருய்யவருள்
போதாவந் தென்னுட் புகுந்து. (19)

கட்டளைக்கலித்துறை.

புகவென் னுளத்துப் பொலிவுறவேநின்றிப் புன்பிறப்பை
யிகவே யொழித்துன் கருணையா லென்று மிணையடிக்கீழ்
தகவே நிறுத்திப் பரத்துட னென்றிடுந் தன்மைசெய்வாய்
மிகுமேலைப் புஞ்சை நகரிரா மாநந்த மெய்த்திருவே. (20)

உ
சிவமயம்.

## அறுசீர்க்கழிநெடிலடிலாசிரியவிருத்தம்.

அன்பர்தொழுஞ் சேவடியெ னம்மையொரு பங்குறையு
மரனூர் மேவு
மன்னுபுகழ் திருவருணை மாநகரின் மேற்புறத்தே
வைகுஞ் செல்வத்
தன்மையுறு விண்ணநகர் மலைமன்னர் தம்மரபின்
வந்து தித்த
புன்மையிலா வெள்ளையப்ப வுடையார்க்கும் சென்
னமைக்கும்
புதல்வ னாகி 1.

வேதாந்த மெய்ப்பொருளை மாநிலத்தோ ருய்யவருள்
விமல ஞான
மாதேவ னடிபணிந்து மறைப்பொருளின் றன்மையெலா
முடியக் கற்றுச்
சாதனையான் மனமடக்கிச் சகநிலையாத் தன்மைகண்டு
சற்கு ருச்சொற்
போதனையாற் றுறவெய்திப் புகழ்பெற்ற சற்குருவே
போற்றி போற்றி. 2.

கருணைமழை பொழிமுகிலே கருதியவர்க் காரமுதே
கடை யேனைச்சூ
ழிருளகற்றி நற்போத மினிதருள வேண்டினனிவ்
வெளியேன் றன்னை

வெருவவகற் ருதினியுன் னடியவரிற் கூட்டிவைக்க
வேண்டு கின்றேன்
மருவியினி தாட்கொள்ளும் மாகுருரா மாநந்த
மலர்த்தாள் போற்றி. 3.

தொடியணிபா வையராசை கொண்டவமே யெக்காலுந்
துணையென் றெண்ணி
மிடியொடுபற் பலநோயாம் வினைவருத்த வின்நாளும்
மெலிந்தோ னிந்தக்
கொடியவனென் றிகழாது குழவிமுகம் பார்த்திடுதாய்
கொள்கை போல
அடியவனை யாதரிப்பா யமலவிரா மாநந்த
வரசே போற்றி. 4.

புல்லியராய்ப் பொருளினராய்க் கொடுங்கோலைப் பூண்ட
பொருந்தி மண்மேல் [வரைப்
நல்லறமே புரியாது மூவாசை யாமவற்றை
நயந்து கெட்டேன்
எல்லையிலாப் புகழுடையி ராமாநந் தக்குருவே
யினியென் செய்வேன்
அல்லலறுத் தடியவனை யாதரிக்க வேண்டினனின்
னடிகள் போற்றி. 5.

கனிரசமே கற்கண்டே கனிந்தசுவை முக்கனியே
கரும்பே தேனே

இனியநறும் பாலமுதே யெடுக்கெடுக்கக்குறையாத
வின்ப வாழ்வே
யெனப்புகழ்ந்தே யடியர்தொழு மேலைநகர் வாழ்குருவே
ராமா நந்தா
வினையேனை யாண்டருள வேண்டுமிது சமயமுன்றன்
விரைத்தாள் போற்றி. 6.

கங்கைபிறை சடையணிந்த கண்ணுதலே யடியர்பவம்
கழிக்க வேண்டி
இங்கொருமா நுடவுருவா யெழில்பெறவே யவதரித்த
விறையே நின்றன்
பங்கயத்தாள் பணிந்திறைஞ்சும் பாலகனுன் கடைத்
பதந்தந் தாள்வா [தேறப்
யெங்குருவே மேலைநகர்ப் பெம்மானே நின்னிருதா
ளென்றும் போற்றி. 7.

நிலமேழுங் கடந்தபரி பூரணமே நிச்சலநின்
மலனே மேலைத்
தலமோங்குந் தற்பரனே சிற்பரனே தண்ணமுதக்
கடலே மோனக்
குலமோங்குங் கோயிலூர் பரம்பரைரா மாநந்தக்
குருவே ஞான
நலமோங்கும் படியெனக்கு நற்போத மினிதளிக்கு
நாதா போற்றி. 8.

ஒருறு நாலேழு மொன்றுமொழிந் துற்றபர
மாஞ யுன்றன்

மாருத தனிமொழியைப் பெற்றோர்கண் முத்திநிலை
மன்னி நின்றார்

வேருக யானொருவன் புன்னெறியில் வீழ்ந்தலைந்து
விளியா நின்றேன்

தேருத புல்லனையுந் தேற்றுவைரா மாநந்தச்
செல்வ போற்றி. 9.

கள்ளமனச் சேட்டையினுற் கருதரிய பிழைசெயினுங்
கனிவா யீன்ற

பிள்ளை தனைப் பெற்றோர்கள் முனிவர்களோ பிழைபொ
பேரின் பத்து [றுத்துப்

வுள்ளவா றிருந்திடச் செய்யுடையவனே சந்நிதிக்கே
யோர்விண் ணப்பம்

கொள்ளுவது தகுமேலை புரியுறை ராமாநந்த
குருவே போற்றி. 10.

ஸ்ரீ இராமாநந்த ஞானதேசிகர் மாணவர்களி
லொருவராகிய மூலக்காடு சண்டமாருதகோத்திரம்
இரண்டேரிப்பட்டுநகர் சாது அண்ணாமலை
நாயனாரால் செய்த துதி.

## காப்பு.

பூவுலகி லேசிறந்த புண்யதல மேலைபுஞ்சை
மேவுமிரா மாநந்த மெய்க்குருமேல்—சீலத்
துதிமாலை சாத்தத் துணையாமென் னெஞ்சில்
துதியானை மாமுகவத் தோன்.

வாரணிமா தொருபாகம் வைத்தபிரான்
வாமருணை மலைக்கீ சானத்

தேரணியுங் கோயிலூ ராதினஞ்
சேர்ந்திலகுந் திகழ்மா தேவப்

பேரணியுங் குருசந்நி தானவருள்
பெற்றிலகும் பெருமை வாய்ந்த

தாரணிசேர் மேலைநக ரிராமாநந்
தக்குருவின் சரணம் போற்றி.

குலங்கொடியேன் குணம்பொல்லேன்
குற்றேவல்செய்தறியேன் குறைகழற்கு
நலம்பெற நன்னீராட்டி நறுஞ்சாந்து
பூசவுநாண்மல ரேகொண்டு
புலனுர,வற்சிக்கேன் புரிதூப மாலாத்தி
புகழ்ந்திறைஞ்சே
னிலனேனு முனதடிமையருள்புரி
ராமாநந்தவிறைவ போற்றி.

என்னையாட் கொள்ளநின் றிருவடியென்
னிருதயத்தி லேத்துகில்லேன்
மன்னியவிந் நாளவும் நற்கரும
மொன்றேனு மனதிற் கொள்ளா
தின்னலையே புரிந்தலைந்து விழலனே
னாயிடினு மெந்தாய் நின்னை
அன்னையென நம்புமெனக் கருள்தரு
ராமாநந்த வரசே போற்றி.

வாரிதியி லோர்துரும்பு நகத்தடியின் றனை
யினுழைந்துற்றதேபோற்
பாரதனி லருமையதா யெடுத்தவிந்த
சனனமது பயன்பெற்றேங்கும்

சீரரிய வொட்டாதயிடணையாந்
திரையத்திற் றிகைக்கு மென்னை
காருவைநீ உன்னைவிடக் கதியிலைரா
மாநந்த கழலே போற்றி.

என்னாளு முனதுதிரு வடிமலரைப்
பூசிக்க ஈவாய் சென்மம்
பன்னாளு முன்னடியார் கூட்டத்தே
பரவியுறும் பாக்கிய மீந்தாள்
முன்னாளின் சஞ்சிதங்கள் மூண்டெரிய
ஞானமருள் மூடாகாம்பம்
பின்னாளுந் தொடராத வகைசெயிரா
மாநந்தப் பெம்மான் போற்றி.

கஸ்தம்பாடி நகர் ம-ா-ா-ஸ்ரீ, பாரத பிரசங்கம்
திருவாளர் நடேச முதலியார் அவர்களால்
செய்யப்பட்ட துதி.

சீரிலகு வுலகமதி லஞ்ஞானத்தால் திறமழியு மானி
தெளியக் காட்ட [டர்க்குத்
பேரிலகு வருணைபதி யீசானத்திற் பேசரிய குருமூர்த்தி
மாதேவர்க்கு

நாரிலகு மாணவரி லொருவராகி நல்லபிர்ம்ம மெய்ஞ்
பொருளைப் போற்றும் [ஞானப்
பாரிலகு மேலைநகர் மடத்தில் வாழும் பான்மைபெறு
தேசிகரைப்பணிகு வோமே.

சாராரு மாணவமாங் காட்டை வெட்டிக் கள்வரெனும்
கல்லைப் பேர்த்துப் [அகங்காரக்
பாராரும் உழுவாத படையைக் கொண்டு பண்புறவே
நிலமதனைப் பாங்கு செய்து
பேராரு மோனமெனும் விதைவி தைத்துப்பேரின்பப்
பயிராக்கி யடியார்க் கீயும்
ஏராரு மேலைநக ரிராமா நந்த வெழிற்குருவின்
திருவடியை யிறைஞ்சு வோமே 2.

அஞ்ஞான மாயை கொண்டே யலைந்திடு மாந்தருக்கு
மெய்ஞ்ஞானப் பொருளைக்காட்ட மேலைமா நகர்வந்
திசெஞ்சாரக்களபம் பூசிச்சேவடி பரவி யேத்தி [துற்றாய்
நெஞ்சாரத் துதிப்பதற்கு நித்தனே யருள்செய்வாயே 3.

முற்றிற்று.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 36132

சிவமயம்.

# ஆயுர்வேத வைத்தியசாலை

# விளம்பரம்.

எமது நண்பர் பரம்பரை வைத்தியம் இரண்டேரிப்பட்டு நகர் ஜெயராவ் நைனர் என்பவர் திருவண்ணமலை ஈசானிய மடாலயத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி யென்னும் ஞானியரால் அனுக்கிரகம் பெற்று பற்பங்கள், செந்தூரங்கள், லேகியங்கள், மாத்திரைகள், எண்ணெய்கள் பூனனி முறைகளையுங்கொண்டு வெகுநாளாய் அனுபவ பிரசித்தமாய் வைத்தியஞ்செய்து வருகிறர். வியாதியஸ்தர்களுக்கு வெகு அனுகூலமாய் வருகிறது. இப்படிக்கு,

சின்னக்கண்ணனும்

**அருணசல நாயனர்,**

கணிதசோதிடம், இரண்டேரிப்பட்டு



உ

ஓம் பரப்பிரம்மணே நமஃ

# இலட்சுமி விலாஸ அச்சுக்கூடம்,

## லாங்குபஜார், வேலூர்.

## அச்சுவேலை விளம்பரம்.

**அன்பிற் சிறந்த செந்தமிழ் செல்வர்காள்!**

எமது அச்சுக்கூடத்தில் எவ்விதமான அச்சு வேலைகளையும் மிகசுத்தமாக குறித்த காலத்திற்குள் மிகக் குறைந்த கட்டணத்திற்குச் செய்து கொடுக்கப்படும். புத்தகம், கலியாணப்பத்திரிகை, விளம்பர நோட்டீசுகள், லெட்டர்பாரம், பில்புத்தகம், கணக்குப்புத்தகம் மற்றும் எந்த வேலைகளாயினும் செய்துகொடுக்கப்படும். ஒருதரம் தாங்கள் அச்சிடும்வேலையைக் கொடுத்துப் பார்த்தால் உண்மை விளங்கும் ஆதலால் அதிகமாக எழுதுவது மிகையாகும். அச்சிடுதற்குவேண்டிய கையெழுத்துக்காப்பியை முன்னதாக அனுப்பி கட்டணம் (சார்ஜு) முதலியவைகளைத் தெரிந்துக்கொள்க. பதில் வேண்டுவோர் ரிப்ளைகார்டு அனுப்பவும்.

இங்ஙனம்,

**ஆ. க. வெங்கடாசல நாயகர்,**

சொந்தக்காரர்.

இலட்சுமி விலாஸ அச்சுக்கூடம்,

லாங்குபஜார், வேலூர். (*N. A. Dist*)